முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1098

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.10.2022, சனிக்கிழமை

1. தர்மசக்தியாய் வாழும் அரங்கா
தவசியாய் நின்ற ஆறுமுக அரங்கா
பேருலகம் உன்னால் மாற்றம் பெறும் என
பிரணவ சித்திமிகு ஆறுமுகனார் யானும்
2. யானும் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசியை
அருளுவேன் சுபகிருது நங்கை திங்களில்
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 14 ம் நாள், 01.10.2022 சனிக்கிழமை)
ஞானமெனும் உயர் சக்திகொண்டு
ஞானலோகம் படைக்க வந்த அரங்கனே
3. அரங்கனே உன் தர்மத்தால் உலகம்
ஆற்றல்பட மாற்றம் பெறும் என்பேன்
வரங்கள் தரும் எந்தன் சக்தி வழி உந்தனுக்கு
வையகத்தில் தனி ஞானப்படைகள் உருவாகி
4. உருவாகி அகிலமெங்கிலும்
உன் நாமஜெபம் போற்றி
போற்றியே என் வழிபாடு பெருகி
புண்ணியலோகமாக இந்த மாற்றம்
5. ஆற்றல்பட ஆறுமுகன் யான் உன் கொள்கைகொண்டு நடத்துவேன்
அரங்கனே என என்னை இந்த உலகமெங்கும் நிரூபிக்கச்செய்து
செய்துமே அதன் வழி உன் அவதாரத்தை
சித்திமிகு ஞானியர்கள் அவதாரமாக
6. உத்தமமாய் உலகோர் அறியச்செய்து
உலகமெல்லாம் உன் வழி வரச்செய்து
செய்துமே உலகில் ஞான ஆட்சி
உயர்வாக நடைபெற அருள்புரிவேன்
7. அருளாக அரங்கன் நீ செய்யும் அனைத்து சேவைகளையும்
ஆறுமுகன் ஆசி தந்து காத்து வருகின்றேன்
மறுப்பின்றி ஏற்ற மக்களெல்லாம்
மரணத்தை வெல்வது உறுதியப்பா
8. தருகின்ற குணம் கொண்டு உன்வழி
தடையற தர்மத்தை காப்பவரெல்லாம்
பெருமைமிக்க ஞானிகளெனும் அடையாளத்தோடு
பிறவா பெரும் பேரு இந்த கலியில் பெற்று

9. பெற்றுமே அவர்களெல்லாம் ஞானவான்களாக
பிசகின்றி உன்னால் தேர்வு செய்யப்பட்டு
ஆற்றல்பட ஞானயுகமாற்றத்தில்
அவர்களெல்லாம் இடம்பெற்று அழியாமை பெறுவரப்பா

10. அப்பனே அரங்கனின் இந்த அவதாரத்தை
அகிலம் ஏற்று வந்தால் போதும்
மகிழவே கலியின் கட்டங்களெல்லாம் விலகி
மக்களெல்லாம் மகிமை பொருந்திய ஞானிகளாக மாற்றங்கண்டு சிறக்க நேரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–